# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,549 — 1958 ඔක්තෝබර් 10 වැනි සිකුරාදා —10.10.1958**

**11,549 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II—சட்ட சம்பந்தமானது

## சுப்பிறீங்கோட் கிறிமினெல் வழக்கு விசாரணைகள்பற்றிய அறிவித்தல்கள்

### பிரகடனம்

இலங்கைத் துவீபத்தின் கௌரவ உயர்தர நீதிமன்றம் தென்வட்டாரத்தின் மாத்தறை, அம்பாந்தோட்டை, தங்காலை பிரிவுகளுக்கென நடாத்தும் கிறிமினெல் வழக்கு விசாரணை மாத்தறையில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் 1958 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ஆம் திகதி காலை 11 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்று, குறித்த உயர்தர நீதிமன்றம் எனக்குப் பிறப்பித்துள்ள கட்டளையின் பிரகாரம் இத்தாற் பிரகடனப்படுத்துகிறேன்.

மேலும் குறித்த வழக்கு விசாரணையிற் சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் மேற்சொல்லப்பட்ட நேரத்திலும், இடத்திலும் சமுகமாயிருந்து, அனுமதி கேட்டுப்பெற்றன்றி அவ்விடத்தை விட்டு நீங்காதிருக்கக்கடவர். 19.9.58 இல் யான் விடுத்த பிரகடனம் இத்தால் ரத்துச்செய்யப்படுகின்றது.

சி. ஜே. சேரசிங்க,
தெ. மா. பிசுக்கால்.

பிசுக்கால் கந்தோர்.